**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC No. 83 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 19** |
| **Name** | : | **திரு. அழகர்சாமி** |
| **Father's Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **27.01.2026**

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் தற்போது பேரையூர் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராகப் பணிபுரிந்து வருகிறேன். 01.10.2016ம் தேதி சாப்டூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராகப் பணிபுரிந்த போது, சாப்டூர் காவல் நிலைய குற்ற எண்.177/2016 வழக்கில் அடையாளம் தெரியாத பெண் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்வதற்காக காவல் ஆய்வாளர் கொடுத்தனுப்பிய வேண்டுகோள் கடிதத்தை, சம்பவ இடத்தில் பிரேத பரிசோதனை செய்வதற்காக அன்றைய தினம் மதியம் 02.15 மணிக்கு உசிலம்பட்டி அரசு தலைமை மருத்துவ அதிகாரியிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். மேற்படி மருத்துவர், அன்றைய தினம், 03.45 மணிக்கு சம்பவ இடத்திலேயே பிரத பரிசோதனை செய்து, பிரேதத்தின் உள்ளுறுப்புகள்

சேகரிக்கப்பட்டது. பிரேத பரிசோதனையின் போது, பிரேதத்தின் மீது இருந்த சிவப்பு மற்றும் வைலட் கலர் கலந்த துப்பட்டா (அசாபொ.1) கைப்பற்றப்பட்டது. பின்னர் பிரேத பரிசோதனை முடிக்கப்பட்டது. 02.10.2016ம்தேதி காலை 09.00 மணிக்கு காவல் ஆய்வாளரிடம் கைப்பற்றப்பட்ட அசாபொ.1 துப்பட்டா ஒப்படைக்கப்பட்டது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :**

சம்பவ இடத்திற்கு மதியம் 02.15 மணிக்குச் சென்றேன். அங்கு பெண் பிரேதம் நான் போவதற்கு முன்பே தோண்டி எடுக்கப்பட்டிருந்தது என்று சொன்னால் தவறு. அந்த பிரேதம், அடையாளம் தெரிய முடியாத அளவு அழுகிய நிலையில் இருந்தது. பிரேதத்தின் மீது இருந்த துப்பட்டா தவிர வேறு எதுவும் ஆய்வாளரிடம் நான் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். பிரேத பரிசோதனை செய்யும்போது, அந்த பிரேதம் பற்றி எந்த விபரமும் எனக்குத் தெரியாது என்றால் சரிதான். பிரேத பரிசோதனை முடிந்து சுமார் 10 மாதங்கள் கழித்து 26.08.2017ம் தேதி தான் ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். நான் சொன்னது போல், சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் பிரேத பரிசோதனைக்கான வேண்டுகோள் கடிதத்தை நான் கொடுக்கவில்லை என்றும் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.01.27 16:03:29 +0530

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம், மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC No. 83 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 20** |
| **Name** | : | **திரு. சேகர்** |
| **Father's Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **27.01.2026**

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் தற்போது விக்ரமங்கலம் காவல் நிலையத்தில் தலைமை காவலராகப் பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு, சாப்டூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராகப் பணிபுரிந்த போது, சாப்டூர் காவல் நிலைய குற்ற எண். 177/2016 பிரிவு 174 குவிமுச @ 366, 376, 302, 201 இதச வழக்கின் சட்டப்பிரிவு மாறுதல் துரித அறிக்கையை கனம் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பேரையூர் அவர்களிடம் 03.10.2016ம் தேதியன்று ஒப்படைத்தேன். பின்பு 26.08.2017ம்தேதி பேரையூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் துரித அறிக்கை ஒப்படைத்தது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

## குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :

நான் சட்டப்பிரிவு மாறுதல் துரித அறிக்கையை நீதிமன்றத்தில் ஒப்படைத்த 10 மாதங்கள் கழித்து, 26.08.2017ம் தேதி தான் ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். நான் சொன்னது போல், சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் நீதிமன்றத்தில் நான் துரித அறிக்கை கொடுக்கவில்லை என்றும் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

NAGARAJAN
Digitally signed by NAGARAJAN
Date: 2026.01.27 16:03:42 +0530

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம், மதுரை